திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு, வராத டாக்டர்களுக்கு அரசு வேலை கொடுக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே. அந்தப் பிரச்சனை வரவில்லை. ஏனென்றால், அவர்கள் வரவில்லை என்றால் உத்தியோகம் கிடையாது.

கண்ணொளி இழந்தவர்களுக்கு கண்கள் பொருத்துப் பணி

*வினா எண் 691— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண்ணொளி இழந்தவர்களுக்கு கண் பொருத்த தமிழ்நாட்டில் உள்ள கண் ஆராய்ச்சி நிலையத்தில் போதிய கண்கள் உள்ளனவா ?

(ஆ) இல்லையெனில் வெளிநாடுகளில் இருந்து கண் இறக்குமதி செய்யும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை

(ஆ) தற்போது இலங்கையில் உள்ள சர்வதேச கண் வங்கி மூலம் பெறப்படும் கண்விழிகளைத் தவிர, மற்றபடி வேறு நாடுகளிலிருந்து கண் விழிகளை இறக்குமதி செய்யும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, இறந்து போய்விட்ட ஒருவருடைய உடல் எரிக்கப்பட்டாலோ அல்லது புதைக்கப்பட்டாலோ இறந்துபோனவருடைய உடல் எந்த ஆராய்ச்சிக்கும் பயன்படாமல் போய்விடுகிறது. ''ஆக்கப் பட்டப் பொருட்கள் அனைத்தும் அரசாங்கத்திற்குச் சொந்தம்'' என்ற தத்துவத்தின் அடிப்படையில் யார் இறந்தாலும் அவருடைய கண்கள் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று சட்டம் கொண்டுவரப்படுமா ? அப்படி இறந்தவருடைய கண்களை எடுக்கும்போது முகத்தில் பொத்தல் விழுந்துவிடுவதால் கண்களைக் கொடுக்க உறவினர்கள் முன்வரவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட பிணங்களுக்கு கறுப்புக்கண்ணாடி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு சட்டம் 11/60 என்று இருக்கிறது. This Act of the Madras Legislatur received the assent of the Governor of Madras, அந்தச் சட்டத்தில் சில ஷரத்துக்கள் இருக்கின்றன. அந்தச் சட்டத்தின் கீழ் நாம் முழுமையாக நம்முடைய விருப்பதற்கு ஏற்பஇயங்க முடியாது பணி யாற்றமுடியாது ஆகவே சட்டத்தைத் திருத்தினால் நன்றாயிருக்கும் கண்தானம் செய்கிறேன் என்று ஒருவர் கையெழுத்துப் போட்டு எழுதிக்கொடுத்து இருந்தாலும், அவர் இறந்தபிறகு அவருடைய உறவினர் ஒருவர் அதைத் தடுத்தால் கூட நாம் இறந்தவன் கண்ணை எடுத்துக்கொள்ளமுடியாது. ஆகவே, இந்த 60வது ஆண்டு சட்டத்தை தகுந்த முறையில் திருத்தம் செய்யவேண்டி யிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் ஏற்றுக் கொள்கிறேன்.

மற்றபடி சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். கண் தானம் என்று சொன்னால் கண் விழியையே எடுத்து விடுவது என்பது அல்ல. கண்ணில் உள்ள 'கார்னியா' தான் எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆகவே இதை 'ஐ டொனேஷன்' என்பதைவிட 'கார்னியோ டோனேஷன்' என்று தான் சொல்வது சரியாக இருக்கும். இதை மிக எளிதாக, சுலப மாகச் செய்யலாம். அந்தச் சட்டத்தை திருத்தியும் செய்ய லாம். மக்களுடைய ஒத்துழைப்பு இருந்தாலும் செய்யலாம். இலங்கையில் கண் தானம் செய்தால் புண்ணியம் வரும் என்று நினைத்துச் செய்கிறார்கள். இங்கே கண் தானம் செய்தால் ஏதாவது ஆகிவிடுமோ என்று பயப்படுகிறார்கள். சிறிய நாடான இலங்கையில் இதை வெற்றிகரமாகச் செய்து வருகிற போது, பெரிய நாடாக இருக்கும்—பெரிய மாநிலமாக இருக்கும் —தமிழ் நாட்டில் இதை மிக நல்ல முறையில் செய்யலாம் என்று நான் கருதுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணொளி இழந்தவர்களுக்கு கண் தானம் அளிப்பதற்காக இந்தக் கேள்வியின் மூலம் எனது கண்ணை நான் தானமாகத் தரத் தயாராக இருக்கிறேன். அந்தப் பத்திரத்தில் கை யெழுத்துப் போட்டுத் தர தயாராக இருக்கிறேன். இந்த இலாகா பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கிற, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கண்தானம் செய்ய முன்வருவார்களா என்று அறியவிரும்புகிறேன். அதைப்போலவே, இங்கேயுள்ள மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் கண் தானம் அளிக்கவேண்டு மென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வற்புறுத்துவார் களா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1982 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண் தானம் செய்வதாக ஏற்கெனவே அறிவித்து இருக்கிறார்கள் அந்தச் செய்தி பத்திரிகைகளில் ஏற்கனவே வந்து இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி போன்றவர்கள் இந்த மாதிரியான இயக்கத்திற்கு முன் உதாரணமாக, இருந்தால் மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும். என்னைப் பொறுத்தவவரையில், நான் ஏற்கனவே கண் தானம் செய்வதற்கு கையெழுத்துப் போட்டுக் கொடுத்து இருக்கிறேன். பின்னால் எந்தப்பிரச்னையும் வரக்கூடாது என்பதற்காக என்னுடைய வீட்டிலே இருப்பவர்களிடத்திலும் அதிலே, கையெழுத்து வாங்கிக் கொடுத்து இருக்கிறேன். ஆகவே எனது இரண்டு கண்கள் இரண்டு கண்ணொளி இழந்தவர்களுக்குப் பயன்படும். இந்த வகையில் சட்டமன்ற உறுப்பினர்கள் கண் தானம் செய்ய முன்வர ஆரம்பித்தால், அதற்காக இயக்கம் நடத்த ஆரம்பித்தால், இலங்கையை விட மிக முன்னேற்றத்தில் நாம் இருக்க முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணன் பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண் தானம் செய்வது என்பது மிகச் சிறந்த பணி. ஆகவே கண்தானம் செய்கிறவர்களுக்கு அரசு விசேஷமாக ஏதாவது விருதுகள் வழங்குவதாக இருந்தால், எல்லோரும் கண்தானம் செய்யத் தயாராக இருப்பார்கள். அப்படி ஏதாவது விருது வழங்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தானத்திற்கு நன்கொடை கேட்கக் கூடாது. அதற்குப் பெயர் தானம் இல்லை.

செம்பட்டு பகுதியிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவு நீர்.

*வினா எண். 692—திரு. எம். அண்ணதாசன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவரம்பூர் தொகுதியைச் சார்ந்த செம்பட்டு பகுதியில் அமைந்துள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் கழிவுநீரினால் சுகாதாரக் கேடுகள் வருவது குறித்து அரசுக்கு பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்துள்ளனவா ?

(ஆ) அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே. (அ) மற்றும் (ஆ) திருவரம்பூர் தொகுதியைச் சார்ந்த செம்பட்டு பகுதியிலுள்ள தோல்பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து